செய்தி வெளியீடு எண்: 166 நாள் : 21/03/2016

**<u>தேர்தல் நாளன்று சம்பளத்துடன் விடுமுறை அளிக்கப்படுவதால் தவறாமல் வாக்களிக்க வேண்டும் – மாநில தேர்தல் அதிகாரி தகவல்.</u>**

********

தமிழ்நாட்டிலுள்ள தூத்துக்குடி மாவட்டத்தில் தேர்தல் விதிமுறைகளை மீறி எந்தவித ஆவணங்களும் இல்லாமல் வாகனத்தில் கொண்டு சென்ற ரூ.74,50,000/– தேர்தல் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டது. மதுரை, ஜெய்ஹிந்தபுரம், பாரதியார் சாலையைச் சேர்ந்த ஆர்.வினோத் என்பவர் உரிய ஆவணங்கள் இல்லாமல் தூத்துக்குடிக்கு பணம் கொண்டு சென்றபோது, அப்பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்ட பறக்கும் படையினர் வாகனத்தை சோதனை செய்து ஆவணங்கள் இல்லாததால் வாகனத்தில் கொண்டு சென்ற ரூ.74,50,000/– ஐ பறிமுதல் செய்து, பணத்தை கோவில்பட்டி சார்கருவூலத்தில் செலுத்தியுள்ளனர். இத்தொகை குறித்து அப்பகுதி தேர்தல் நடத்தும் அலுவலரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுபோன்று திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ.16,77,990/–, கேரளாவில் இருந்து நீலகிரி மாவட்டத்திற்கு கொண்டு சென்ற ரூ.2.70 லட்சம், கன்னியாகுமரியில் ரூ.1.50 லட்சம், பெரம்பலூரில் ரூ.1.33 லட்சம், திண்டுக்கல்லில் ரு.1.12 லட்சம் உட்பட 18.03.16 அன்று ஒரு நாள் மட்டும் ரூ.1,00,22,430/– பறிமுதல் செய்யப்பட்டது. இதுவரை ரூ.4.69 கோடி பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்தில் முறைப்படி அனுமதி பெறாமல் எடுத்துச் சென்ற 40 இட்லி குக்கர்கள், 84 நான்ஸ்டிகடாய், 60 நான்ஸ்டிக் கடாய் தவா போன்ற ரூ.71 ஆயிரம் மதிப்பிலான பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. பல்வேறு மாவட்டங்களில் அனுமதியில்லாமல் கொண்டு சென்ற மதுவகைகள் கைப்பற்றப்பட்டன.

மதுரையில் வாக்காளர் பட்டியலுடன் நலத்திட்டங்களுக்கான பட்டியலுடன் சென்றது, சுவர் விளம்பரம், வாகனத்தில் கட்சிக் கொடி கட்டிச் சென்றது, கொடி கம்பத்திற்கு பள்ளம் தோண்டியது போன்ற காரணங்களுக்காக பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த அரசியல் கட்சியினர் மீது வழக்கு பதியப்பட்டுள்ளன. கண்காணிப்புச் குழுவினரால் மதுரை மாவட்டத்தில் ரூ.5.67 லட்சம், நீலகிரி மாவட்டத்தில் ரூ.2.46 லட்சம், விருதுநகரில் ரூ.1.65 லட்சம் மற்றும் பல்வேறு மாவட்டங்களில் அனுமதியின்றி கொண்டு சென்ற மதுவகைகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலுக்கு வந்தபின் 21.03.2016 வரை பொதுச் சொத்துக்கு சேதம் விளைவித்தாக 1,48,390 புகார்களும், தனியார் சொத்துகளுக்கு சேதம் விளைவித்ததாக 440,95 புகார்களும் பெறப்பட்டன. சுவர்களில் எழுதியது தொடர்பாக வந்த 1,01,206 புகார்கள் சுவரில் எழுதியதை அழித்து விட்டதால் முடிவுக்கு வந்தன. பொது சொத்துக்கு சேதம் விளைவித்தாக 887 வழக்குகளும், தனியார் சொத்துக்கு சேதம் விளைவித்தாக 208 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. தேர்தலில் தவறாக வாகனத்தை பயன்படுத்தியதால் 1,411 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தேர்தல் நாளான **16.05.2016** அன்று அனைத்து தனியார் நிறுவனங்கள், ஐ.டி நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் என அனைத்தும் சம்பளத்துடன் விடுமுறை அளிக்கவேண்டும் என்றும், அந்நாளில் விடுமுறை வழங்கப்படுவதால் நிறுவன பணியாளர்கள் அனைவரும் தவறாமல் வாக்களிக்க உறுதி கொள்ள வேண்டும் என்றும், வண்ண வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கப்படுவது தொடங்கப்பட்டு இக்குறுகிய நாட்களில் இதுவரை **38** ஆயிரம் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், தொலைக்காட்சிகளில் வரும் தேர்தல் செய்திகள் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், சாதாரண மக்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் தேர்தல் பணியாற்ற தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி ராஜேஷ் லக்கானி இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் இன்று **(21.03.2016)** பேசும் போது தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**